28—9—1971 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இஃது மதுரை மாவட்ட அதிகாரியின் பரிசீலனையில் உள்ளது.

Officials of Civil Supplies Department in Coimbatore district

* 50 Q.—THIRU N. DENNIS : Will the hon. the Minister for Food and Revenue be pleased to state whether a number of officials of the Civil Supplies Department in Coimbatore district were suspended for being involved in complicity in the Fake Rice Cards Case?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி வணிகர்கள் மிகுதியாக அரிசி பெறுவதற்காக ஈடுபட்ட முறைகேடுகளில் பங்கு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு ஏழு அதிகாரிகள் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். இது குறித்துப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

THIRU N. DENNIS : May I know from the hon. Minister whether any such occurrence took place in any other place in the State?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது படியரிசித் திட்டம் நடந்த கோயம்புத்தூரில் நடைபெற்ற ஒரு மோசடி. எனவே மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இருக்க நியாயம் இல்லை. அங்குதான் இது ஏற்பட்டு இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சார், இதனுலே ரூரல் ஏரியாவில் அவர்கள் வைத்திருந்த உண்மையான கார்டுகள்கூட பறிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, போலி கார்டுகளைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் நான் அந்த மாவட்டத்திற்குச் சென்றிருந்தபொழுது அதிகாரிகளோடு பேசிவிட்டு வந்தேன். அதன்படி போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. உண்மையான நிலவரம் என்னவென்றால், இப்பொழுது 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சென்சஸ் கணக்குப்படி கோவை நகரத்திலும், அந்த நகர் சுற்றுப்புறத்திலும் முழுவதும் 6,69,825 ஆகும். ஆனால் 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி கொடுப்பதாக அறிவித்திருந்தோம். மக்கள் பயன் அடைகிறார்களோ இல்லையோ கார்டுகள் எண்ணிக்கை 6,32,316 ஆகும். எனவே போலி கார்டுகள் அதிகமாக இருந்த காரணத்தால் கண்டுபிடிக்கப்பட்டன.

1972 சனவரி 25]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் தகவலை வெளியிட்டார்கள். என்றைக்கு சஸ்பெண்ட் செய்தார்கள்? விசாரணை எப்பொழுது முடியும்? துரிதமாக முடிக்க அரசாங்கம் வேண்டிய தாக்கீதுகளை நல்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்ற ஆண்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். சீக்கிரத்திலே அவர்கள் மீது விசாரணையெல்லாம் நடைபெற்று முடியும்.

பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு

*** 51 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டு பஞ்சாலைகளுக்கு ஆண்டுக்கு எவ்வளவு லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏறக்குறைய 13.19 லட்சம் பேல்கள்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே உற்பத்தியாகும் பஞ்சின் அளவு ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு ஆகும். தமிழ் நாட்டின் தேவைக்கான பஞ்சு பிற மாநிலங்களிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு வருகிறது. அந்தப் பஞ்சு வந்து இங்கே செய்ய வேண்டியிருப்பதால் பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி ஏற்படுகிறது. எனவே இதைத் தவிர்க்கும் முறையில் இங்கேயே பஞ்சை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ஐந்தாண்டுத் திட்டமிட்டு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளில் ஏற்படுகின்ற தொல்லைகளுக்கான காரணங்களில் இது ஒன்று, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இதற்காக நம் வேளாண்மைத் துறையில் தனியாக ஒரு திட்டமிட்டு பருத்தி உற்பத்திக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதுபற்றி வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்டால் விவரம் சொல்லுவார்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி : தமிழ்நாட்டுக்குத் தேவையாக இருக்கக்கூடிய இந்தப் பஞ்சு வட இந்தியாவில், குறிப்பாக மகாராஷ்டிராவில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பேல்கள் இறக்குமதி ஆகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில வாரியாகப் புள்ளி விவரம் இல்லை. நம்முடைய தமிழ்நாட்டில் 5.3 லட்சம் கிடைக்கிறது. மீதி 8 லட்சம் வெளி நாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்கிறோம். வெளிநாட்டுப் பஞ்சைப் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு 16,240 பேல்கள் தேவைப்படுகின்றன.